

தற்போது உங்கள் தொலைபேசியில் Easypay App இல் பிரவேசிக்க இலக்கமொன்றை வழங்குவது அவசியம். முதலில் நீங்கள் PIN இலக்கத்தை பதியவும் இரண்டாவதாக மீண்டும் அந்த PIN இலக்கத்தை பதிந்து அதை உறுதி செய்யவும்.

அடுத்ததாக உங்கள் தொலைபேசியில் Fingerprint மூலமாக அல்லது Face ID மூலமாக Unlock செய்யும் வசதி இருக்குமாயின், அதை Easypay App க்காகவும் Activate செய்யவும்.



**பதிவு செய்யும் முறை பூர்த்தி. விரைவில் உங்களின் பதிவு உறுதி செய்யப்படும்.**


அதுவரை உங்களுக்கு அது பற்றி App இல் இவ்வாறு காண்பிக்கப்படும்.




**உங்கள் பதிவு பூர்த்தியடைந்த பின்னர், உங்களுக்கு இதுபோன்ற திரை தோன்றும். அதில்,**

இதனூடாக உங்களின் வங்கி கணக்கில் பெற்றுக் கொள்ளக்கூடிய பணத்தின் அளவை பார்வையிட முடியும். இந்தத் தொகை உங்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவது நாளொன்றில் ஒரு தடவை சுயமாக மேற்கொள்ளப்படும்.

இதனூடாக உங்களுக்கு கிடைத்த QR கொடுப்பனவுகளை பார்வையிட முடியும்.




இங்கு இரு பிரதான QR வகைகள் உள்ளன

- **My QR**

இதனூடாக உங்களின் வியாபாரத்துக்கான QR ஐ பெற்றுக் கொள்ளலாம். இதனை அச்சிட்டு உங்கள் வியாபார நிலையத்தின் பணம் செலுத்துமிடத்துக்கு அருகில் வைப்பதன் மூலம், வாடிக்கையாளர்களுக்கு இதை Scan செய்து QR கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

- **Generate QR**

இதனூடாக உங்களின் உரிய பணத்தொகைக்காக QR ஒன்றை உருவாக்கிக் கொள்ள முடியும். அதனை scan செய்து வாடிக்கையாளருக்கு நீங்கள் குறிப்பிட்ட தொகையை செலுத்த முடியும்.

அவசியமாயின் இந்த இரு வகைகளையும் இன்னொருவருக்கு அனுப்ப முடியும். அதன் போது அந்த நபர் உங்கள் அருகில் இல்லாவிட்டாலும் நீங்கள் அனுப்பும் QR ஐ scan செய்து பணத்தை செலுத்த முடியும்.




easypay.lk


Easypay

POWERED BY

SEYLAN

# வியாபார உரிமையாளர்களுக்கான கையேடு

இந்த QR ஐ Scan செய்து உங்களுக்கு இதில் பதிவு செய்து கொள்ளும் படிமுறை ஒவ்வொன்றும் அடங்கிய வீடியோவை பார்க்கலாம்.



**இந்த பதிவு செய்தல் செயற்பாட்டின் போது உங்களால் வழங்கப்பட வேண்டிய புகைப்படங்கள் மற்றும் தரவுகள் சில உள்ளன. அதனால் பதிவு செய்தலை ஆரம்பிக்கும் முன்னர் இந்த புகைப்படங்களை உங்களின் தொலைபேசி Gallery இல் சேர்த்துக் கொள்ளவும், தரவுகளை குறித்துக் கொள்ளவும்.**

- **தேசிய அடையாள அட்டையின் முன்பக்க புகைப்படம்.**
- **தேசிய அடையாள அட்டையின் பின்பக்க புகைப்படம்.**

(தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டு செல்லுபடியாகும்)


- **வியாபாரத்தின் பதிவு இலக்கம்.**
- **வியாபார பதிவு சான்றிதழின் புகைப்படம்.**
- **உங்கள் வியாபாரத்தின் புகைப்படம்.**

(உங்கள் வியாபாரம் பதிவு செய்யப்படாத வியாபாரமாயின், உங்கள் வியாபாரத்தின் புகைப்படம் மாத்திரம் போதுமானதாகும்)

- **உங்களுக்கு பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய வங்கி கணக்கின், உங்கள் அடையாளத்தை உறுதி செய்யக்கூடிய கணக்கு புத்தகத்தின் அல்லது கணக்கு உரிமையாண்மையை உறுதி செய்யும் வகையில் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடிதம் அல்லது பணப் பரிமாற்ற சிட்டை ஒன்றின் புகைப்படம்.**


GET IT ON Google Play

Download on the App Store




**இந்த QR ஐ scan செய்து Easypay Business App ஐ உங்கள் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்யுங்கள்.**

01.




02.




**01.**

உங்களின் தொலைபேசி இலக்கத்தை வழங்கி **Continue** பண்ணவும்.
(ஆரம்பத்திலுள்ள 0 இல்லாமல் ஏனைய இலக்கங்கள் ஒன்பதையும் பதியவும்)


**02.**

நீங்கள் பதிந்த தொலைபேசி இலக்கத்துக்கு கிடைக்கும் **OTP** இலக்கத்தை வழங்கவும்.

## இனி உங்களின் தரவுகளை வழங்கவும்.


- பெயர்
- மின்னஞ்சல் (Email) முகவரி
- தேசிய அடையாள அட்டை இலக்கம்
- தேசிய அடையாள அட்டையின் முன்பக்க புகைப்படம்.
(முன்னர் தயார்செய்து கொண்ட படத்தை Gallery இலிருந்து தெரிந்து கொள்ளவும்)
- தேசிய அடையாள அட்டையின் பின்பக்க புகைப்படம்.
(முன்னர் தயார்செய்து கொண்ட படத்தை Gallery இலிருந்து தெரிந்து கொள்ளவும்)

**இந்த தரவுகளை வழங்கி Continue பண்ணவும்**





## இனி உங்களின் வியாபாரம் தொடர்பான தரவுகளை வழங்கவும்.

- வியாபாரத்தின் பெயர்
- வியாபாரத்தின் வகையை தெரிவு செய்யவும்
- வியாபாரம் உள்ளடங்கும் பிரிவை தெரிவு செய்யவும்
- வியாபாரம் உள்ளடங்கும் உபபிரிவை தெரிவு செய்யவும்
- உங்கள் வியாபாரத்தின் தன்மை தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்
- வியாபார பதிவு இலக்கம்
- வியாபார பதிவு சான்றிதழின் புகைப்படம்
- உங்கள் வியாபாரத்தின் புகைப்படம்
(உங்கள் வியாபாரம் பதிவு செய்யப்படாத வியாபாரமாயின், உங்கள் வியாபாரத்தின் புகைப்படம் மாத்திரம் போதுமானதாகும்)
- வியாபாரத்தின் முகவரி
- நகரம் • மாகாணம் • தபால் இலக்கம்
- வியாபாரத்தின் தொலைபேசி இல.
- வியாபாரத்தின் மின்னஞ்சல் முகவரி




## இனி உங்களுக்கான கொடுப்பனவுகளை வைப்புச் செய்ய வேண்டிய வங்கிக் கணக்கின் தகவல்களை வழங்கவும்

- கணக்கின் பெயர்
- கணக்கு இலக்கம்
- உங்கள் வங்கிக் கணக்கின் உரிமையை உறுதி செய்து கொள்ளக்கூடிய புகைப்படம்
(முன்னர் தயார்செய்து கொண்ட படத்தை Gallery இலிருந்து தெரிந்து கொள்ளவும்)
- வங்கியின் பெயர்
- கிளை




**இந்த தரவுகளை வழங்கி Continue பண்ணவும்**